## இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - 2015

இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்தும் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிறுவனம் தொடர்ந்து இயங்குதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் தொடர்ந்து நட்டமடைவதால் தேறிய சொத்துக்களுக்குச் சாதகமற்ற தாக்கம் ஏற்படுதல், நிறுவனத்தில் மேலதிகப் பதவியணியினர் இருத்தல் மற்றும் உயர் முகாமைத்துவப் பதவிகளில் உள்ள உத்தியோகத்தர்கள் குறுகிய காலத்தில் மாற்றங்களுக்குள்ளாகுதல் என்பவற்றால் தொழிற்படு மூலதனத்தில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. இதன் காரணமாக கடந்த 05 ஆண்டு காலத்தின்போது இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் சந்தை நிலைமை 1.1 முதல் 0.7 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்து, அதன் காரணமாக, கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்குவதை வெகுவாகப் பாதித்துள்ளது.

(ஆ) கூட்டுத்தாபனத்தை மீள் வியூகப்படுவதற்கானதொரு அடிப்படையைத் தயாரிப்பதற்கான அமைச்சரவைத் தீர்மானத்திற்கேற்ப தாமாகவே ஓய்வுபெறும் முறை அமுலாக்கப்பட்டிருந்தது. 126 ஊழியர்கள் அதற்கென விண்ணப்பத்திருந்தனர். 2/2016 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் கீழ் 109 ஊழியர்களுக்கு இடமளிக்கப்பட்டிருந்தது. அவர்களுள் 102 ஊழியர்கள் 2016 மே 20 ஆந் திகதி ஓய்வுபெறச் செய்யப்பட்டதுடன், அதற்கெனத் திறைசேரியிடமிருந்து ரூபா 110 மில்லியன் நிதியேற்பாடு பெறப்பட்டுமிருந்தது. கூட்டுத்தாபனத்தை மீள் வியூகப்படுத்துவதற்கும் இலாபகரமாக வணிகமய அரச முயற்சியாக மாற்றமடையச் செய்வதற்குமென ஊழியர் ஓய்வு பெறச் செய்யப்பட்டபோதும், அந்நோக்கத்தை ஈடேற்றுவதற்கு முறையான திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

நிதிச் சொத்துக்களையும் பொறுப்புகளையும் இனங்காண்பதற்கு பயன்படுத்தப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

(i) நியமத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இருந்த ஊழியர் இடர்கடன் மீதி ரூபா 10,075,443 ஐ நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தாது, ஒட்டு மொத்த மீதிகளையும் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

(ii) நியமத்தின் பிரகாரம் அந்நியச் செலாவணி மாற்றங்களுக்கான சீராக்கல் சம்பந்தமாகக் கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

முன்னைய ஆண்டிற்கான சீராக்கலாகிய ரூபா 338,936 உரிமை மாற்றங்கள் கூற்றில் முன்கொண்டுவரப்படும் இலாப, நட்ட மீதியில் சீராக்கம் செய்யப்படுவதற்குப் பதிலாக மீளாய்வாண்டிற்கான இலாப, நட்டக் கணக்கில் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

(ஈ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 17**

குத்தகை அடிப்படையில் பெறப்படும் காணிகளில் விற்பனைச் சாலைகளை நிறுவுவதற்கு ஏற்பட்ட செலவினமாகிய ரூபா 20,396,873 குறித்த சொத்துக்களது பயன்பெறு காலம் அல்லது குத்தகை வாடகை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட காலப்பகுதி எனும் இரண்டில் எது குறைந்ததோ அக்கால அடிப்படையில் தேய்மானத்திற்குள்ளாக்கப்படாது 05 ஆண்டுகளில் தேய்மானத்திற்குள்ளாகுமாறு கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 18**

வருமானத்தை இனங்காண்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படவில்லை.

(ஊ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 19**

மேம்பாட்டுச் சேவைகள் கிரயம் மற்றும் வட்டிக் கிரயக் கூட்டுத் தொகையான ரூபா 14,294,052 ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படும் போது சீராக்கம் செய்யப்பட வேண்டும். ஆயுட் கணிப்பு நட்டமாகிய ரூபா 10,964,641 ஏனைய விரிவான வருமானத்தின் கீழ் சீராக்கல் செய்யப்பட வேண்டும். எனினும், கூட்டுத்தாபனம் மேற்குறிப்பிட்ட ஆயுட் கணிப்பு நட்டத்தையும் உள்ளடக்கியவாறு மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைச் செலவினமாகிய ரூபா 25,258,694 ஐயும் வருமானக் கூற்றில் இனங்கண்டு மீண்டும் அதனை ஏனைய விரிவான வருமானமாக இனங் கண்டமையால் மீளாய்வாண்டிற்கான நட்டம் ரூபா 25,258,694 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(எ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 20**

அரச மானியத்தைக் கணக்கிலிடுவது தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஏ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 38**

சம்பளத் தயாரிப்பிற்கான கணனி மென் அணியினது கிரயமாகிய ரூபா 500,000 அருவச் சொத்தாகக் கணக்கிலிடப்படாது உருவச் சொத்தாகக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஐ) **இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான சொத்துக்களை வெளிநிறுவனங்களுக்குக் குத்தகையில் வழங்குவதன் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 4,695,980 வருமானமாகப் பெறப்பட்டபோதும், அம் முதலீட்டுச் சொத்துக்கள் ஏனைய சொத்தாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்களை மீளப் பெறுமதியிடுவதன் மூலம் ஏற்பட்ட மேலதிகப் பெறுமதி தொடர்பான மீளாய்வாண்டிற்கான தேய்மானமாக ரூபா 45,328,629 மீளப் பெறுமதியிடல் ஒதுக்கத்திற்கெதிரே பதிவழிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக, மீளாய்வாண்டிற்கான தேய்மானச் செலவினம் அதேயளவு தொகையால் நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின்போது நடைபெறும் வேலையின் கீழ் இனங் காணப்பட்டிருந்த ரூபா 3,380,094 கூட்டுத் தொகையுடைய 02 கணக்கீட்டு மீதிகள் மீளாய்வாண்டின்போது பொருத்தமற்றவாறு நானாவித கடன்பட்டோரின் கீழ் இனங்காணப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான மூலதன மானியக் காலக் கழிவாகிய ரூபா 24,644,759 நிதிக்கூற்றுக்களில் ஏனைய வருமானமாக இனங் காணப்படாமல் மீளாய்வாண்டினது தேய்மானச் செலவினத்தில் கழிக்கப்பட்டு, நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கூட்டுத்தாபனத்திற்கும் விற்பனை நிறைவேற்றாளர்களுக்குமிடையே உள்ள கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தமான நடைமுறைக் கணக்கு மீளாய்வாண்டு முடிவில் கணக்கிணக்கஞ் செய்யப்பட்டு சீராக்கல் செய்யப்படாமையால் 57 நடைமுறைக் கணக்குகளில் நிலவிய ரூபா 27,760,665 வித்தியாசமானது நிதிக்கூற்றுக்களில் வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டியனவாகச் சீராக்கம் செய்யப்பட்டிருந்தது.

### 2.2.5 போதிய அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய சொத்துக்களாக இனங்காணப்பட்டிருந்த பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா 5,202,867 பெறுமதியான சொத்துக்கள் மீளாய்வாண்டின் போது முறையான அங்கீகாரமின்றி முன்னைய ஆண்டிற்கான சீராக்கலாகப் பதிவழிக்கப்பட்டிருந்தது.

### 2.2.6 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான வர்த்தகக் கடன் கொடுத்தோர் ரூபா 335,698,363 மற்றும் வர்த்தகக் கடன்பட்டோர் ரூபா 251,356,107 தொகை என்பவற்றிற்கான காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

மட்டக்களப்பிலும் மத்துகமவிலும் மீன் விற்பனைச்சாலைகளை நிர்மாணிப்பதற்கு வழங்கப்பட்ட முற்பணமாகிய ரூபா 540,000 இரண்டு ஆண்டுகளாகத் தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் ஆகியவற்றுடனான தொடர்பு** | **இணங்காமை** |
| --- | --- |
| (அ) 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் சட்டக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டம் | அதிகாரச் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளிலிருந்து விலகியவாறு உப தலைவர் ஒருவர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டின் ஏப்ரல் முதல் திசெம்பர் வரை மாதாந்தம் ரூபா 65,000 வீதப்படி ரூபா 520,000 மற்றும் வாகனத்துடன் எரிபொருளுக்காக ரூபா 83,540 கொடுப்பனவும் செய்யப்பட்டுமிருந்தது. |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தி | கூட்டுத்தாபன ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கோ அல்லது ஏனைய நிறுவனம் ஒன்றிற்கோ விடுவிக்கப்படுவதாயின், அதன் பொருட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். எவ்வாறாயினும், அதற்கு முரணாக, 12 உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு மீளாய்வாண்டின்போது சம்பளமும் படியுமாக ரூபா 840,370 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தினது நிதிசார் விளைவுகள் ரூபா 259,917,474 பற்றாக்குறை ஆகியதுடன் அதற்கொப்பான முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 119,187,790 ஆகியமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 140,729,684 நலிவு தென்பட்டது. திறைசேரியிலிருந்து பெறப்பட்ட நிதியேற்பாட்டில் ரூபா 57,769,995 அதிகரிப்பிருந்தபோதும், விற்பனைக் கிரயம் ரூபா 209,298,089 குறைவடைந்திருக்கையில் விற்பனை வருமானம் ரூபா 343,583,159 குறைவடைந்ததும் விநியோக, நிதி மற்றும் ஏனைய செலவினங்கள் ரூபா 39,477,499 குறைவடைந்தபோதும் நிர்வாகச் செலவினம் ரூபா 93,700,683 அதிகரித்தமையும் மேற்படி நலிவுக்கான பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிக்கூற்றுக்களை பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டில் ரூபா 68,969,869 ஆகிய பற்றாக்குறை 2012 ஆம் ஆண்டின்போது ரூபா 41,763,563 வரை குறைவடைந்து 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை ரூபா 259,917,474 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. ஊழியர்களது ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களது தேய்மானத்திற்கான சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர் 2011 ஆம் ஆண்டின்போது ரூபா 426,724,880 ஆகிய கூட்டுப் பெறுமதி 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 374,762,457 வரை தொடர் அதிகரிப்புக்குள்ளாகியதுடன், 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 370,771,174 வரை குறைவடைந்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த 05 ஆண்டுகளில் ஏற்பட்ட நட்டம் ரூபா 344 மில்லியன் ஆகும். மீளாய்வாண்டு முடிவில் தேறிய நட்டம் ரூபா 259 மில்லியன் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய நட்டம் 118 சதவீத அதிகரிப்புக்குள்ளாகியிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதம் 0.52:1 ஆகும். விரைவு விகிதம் 0.5:1 ஆகும்.

(இ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் மீன், ஐஸ்கட்டிகள், குளிரூட்டல் சாலைகள், டின்களில் அடைக்கப்பட்ட மீன் போன்ற பிரிவுகளது மொத்த இலாப எல்லையும் தேறிய இலாப எல்லையும் பின்வருமாறு.

| விபரம் | மொத்த இலாப எல்லை | | நிகர இலாப எல்லை | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| | % | % | % | % |
| மீன்வருமானம் | 15.32 | 18.19 | (4.36) | 4.06 |
| ஐஸ்கட்டி வருமானம் | 77.75 | 56.51 | (91.64) | (84.60) |
| குளிரூட்டல் சாலை வருமானம் | 97.42 | 96.47 | (52.09) | (22.47) |
| டின்னில் அடைக்கப்பட்ட மீன் வருமானம் | (26.54) | 4.33 | 15.04 | 45.15 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீன் விற்பனை வருமானத்தினது மொத்த இலாப எல்லை 2.87 சதவீதத்தாலும் தேறிய இலாப எல்லை 8.42 சதவீதத்தாலும் குறைந்திருந்தன. விற்பனை வருமானம் குறைவடைவதற்கு ஒப்பாக விற்பனைக் கிரயம் குறைவடையாமை இதற்கான காரணமாக இருந்தது.

(ii) ஐஸ் இயந்திர சாலைகளது விற்பனை வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது 23 சதவீதம் குறைந்திருந்தபோதும், விற்பனைக் கிரயம் அதற்குக் கூடிய சதவீதத்தால், அதாவது 61 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமையால் இவ்வாண்டில் மொத்த இலாப எல்லை 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) டின்களில் அடைக்கப்படும் மீன் பிரிவில் மீளாய்வாண்டின்போது வெளி விற்பனைகள் நடைபெறாததுடன் விற்பனைக் கிரயத்திற்கும் குறைவான விலையில் கூட்டுத்தாபனத்தின் ஏனைய நிறைவேற்றுநர்களுக்கு டின்னில் அடைத்த மீனை விற்பனை செய்தமையாலும் இறுதிக் கையிருப்பு இல்லாதிருந்தமையாலும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது மொத்த நட்ட விகிதம் 30.8 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iv) மீன் விற்பனை மற்றும் குளிரூட்டும் அறை ஆகிய பிரிவுகளில் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது தேறிய இலாப விகிதம் முறையே 8.4 சதவீதத்தாலும் 30 சதவீதத்தாலும் நலிவடைந்தமைக்கு அப்பிரிவுகளது நிர்வாகச் செலவினம் முறையே 20 மற்றும் 4 சதவீதங்களால் அதிகரித்தமையே காரணமாகும்.

(v) டின்னில் அடைத்த மீன் பிரிவுக்குரிய குத்தகை வாடகை வருமானம் இவ்வாண்டில் 60 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் மொத்த நட்டம் ஏற்பட்டமை என்னும் காரணங்களால் மீளாய்வாண்டின் போது தேறிய இலாப விகிதம் குறைவடைந்திருந்தது.

(vi) மீளாய்வாண்டின் போது வருமானத்தின் மீதான நிர்வாகச் செலவினம் 27 சதவீதம் ஆக இருந்ததுடன் விநியோகத்திற்காக 3 சதவீத அதிகரிப்பு மாத்திரமே அதிகரித்திருந்தது. இதற்கமைய, கூட்டுத்தாபன தேறிய இலாபத்தை நட்டத்தை அடைவதற்கு நிறுவனத்தின் நிர்வாகச் செலவினம் அசாதாரணமாக அதிகரித்தமையே காரணம் என அவதானிக்கப்பட்டது.

### 3.3 நிறுவனத்திற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டபூர்வ சம்பவங்கள்

மீளாய்வாண்டினது முடிவளவில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக வெளி நபர்களால் 17 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் நியதிச் சட்டக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் கீழ் 1964 ஒக்டோபர் 01 ஆந் திகதிய 14/186 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மற்றும் 2011 ஜூன் 03 ஆந் திகதிய 1712/21 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் என்பவற்றின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப நோக்கம் பின்வருமாறு சுருக்கித் தரப்பட்டுள்ளது.

- நேரடியாகவோ அல்லது அதிகாரம் பெற்ற முகவர்களினூடாகவோ கடலில் டிரோலர் இயந்திரங்களைப் பயன்படுத்தி மீன் பிடிக்கும் நடவடிக்கைகள், தயாரிக்கும் நடவடிக்கைகள் மற்றும் தொகையாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்தல் அல்லது விநியோக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், குளிர் அறைகள் அடங்கலாக மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் நங்கூரத் தளங்களை நிர்மாணித்தல், பராமரித்தல், மீன் மற்றும் மீன் உற்பத்திகளை இறக்குமதி செய்தலும் ஏற்றுமதி செய்தலும், கடற்றொழில் துறைக்குத் தேவையான உபகரணங்களையும் ஏனைய அவசியமான உபகரணங்களையும் இறக்குமதி செய்தலும் விற்பனை செய்தலும்.

- கடற்றொழில் திணைக்களம் அல்லது அரசாங்கத்தின் வேறெந்தத் திணைக்களத்திற்காகவும் மற்றும் அதன் பொருட்டும் கடற்றொழில் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுதல், கடற்றொழில் துறைக்குப் படகுகளையும் ஏனைய சிறிய வள்ளங்களையும் பெறுதல், மீன்பிடிப் படகுகளைப் பழுதுபார்த்தல், மற்றும் பராமரிப்பிற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் மீன்பிடித்துறைக்கு அவசியமான உபகரணங்களை உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும்.

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கடற்றொழில் துறைமுகக் கூட்டுத்தாபனம், வரையறுக்கப்பட்ட சீ - நோர் மன்றம் மற்றும் இலங்கை தேசிய நீரியல்வாழ் உற்பத்தி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய நிறுவனங்கள் கடற்றொழில் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டமையடுத்து கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நியதிச்சட்ட நோக்கங்கள் சில அந்த நிறுவனங்களிடையே ஒப்படைக்கப்பட்டதன் காரணமாக கடற்றொழில் கூட்டுத்தாபனம் அந்த நோக்கங்களின் பொருட்டு கவனஞ் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை ஸ்தாபிக்கும்போது கூட்டுத்தாபனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த அந் நோக்கங்களைத் திருத்துவது சம்பந்தமாகத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனம் தொடர்ச்சியாக நட்டமடைந்தமை, கடுமையான நிதி நெருக்கடியை எதிர் நோக்கியதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடங்கிய பின்வரும் இலக்குகளை அடைய முடியாது போனது.

- பயனுள்ள அமைப்பாக மொத்தத் தேசிய உற்பத்திக்கு அதி கூடிய பங்களிப்பை வழங்குதல்.

- மீன் உற்பத்தி, தயாரிப்பு மற்றும் விற்பனை என்பவற்றிற்காக பொறுப்புடனும் கவனத்துடனும் விளங்கும் நிறுவனமாக அமைதல்.

- கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளளோரினது பொருளாதார ஆற்றலை சக்திமிக்கதாக்குதல் மற்றும் அதன் உற்பத்திச் சுற்றோட்டத்தை உயர்த்துவதன் மூலம் உயர் அபிவிருத்தியைப் பெறுதல்.
- நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நியாயமான விலையில் உயர் தரத்திலான மீன் மற்றும் பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களது உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடுதல்.

(இ) செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகளின் இலக்கை நிறைவேற்றுவது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 9,708 மெற்றிக் தொன் மீனைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 3125.16 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 1186.93 மில்லியன் செலவழித்து 3443.79 மெற்றிக் தொன் மீன் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக, திட்டமிடப்பட்ட அளவில் விற்பனை செய்த மீனின் அளவு 38 சதவீதமாக அமைந்தது.

(ii) மீளாய்வாண்டில் எய்துவதற்கு இலக்கிடப்பிட்ட ஐஸ் விற்பனை மற்றும் குளிர்ச்சாலை வருமானத்தில் முறையே 23 சதவீதமும் 37 சதவீதமும் மாத்திரமே எய்தப்பட்டிருந்தன.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் ஆண்டின்போது ஏற்பட்ட ரூபா 2,558,028 பெறுமதியான பொதியிலடைத்த பொருட் கையிருப்பு மோசடி சம்பந்தமாகவும் 2014 ஆகஸ்ட் 12 ஆந் திகதியன்று ரூபா 13.9 மில்லியன் கடன் நிலுவை ஏற்படும் விதத்தில் மருத்துவ மனைகளுக்கு மீன் வழங்குதல் உள்ளடங்கலாக 8 புகார்கள் சம்பந்தமாகப் பொறுப்பான நபர்களுக்கு எதிராக முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த குறைவை அறவீடு செய்வதற்கும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் பணிப்பாளர் சபை தீர்மானம் மேற்கொண்டிருந்தபோதும். அத் தீர்மானமானது மீளாய்வாண்டு முடிவு வரை செயற்படுத்தப்படாதிருந்தது.

(ஆ) 2001 பெப்ரவரி மாதத்தில் ரூபா 192,000 பண மோசடி அடங்கலாக 12 மோசடிகளுக்கான புகார்கள் பெறப்பட்டு வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தின் உதவி முகாமையாளர் ஒருவர் பணிப்பாளர் சபையினது அங்கீகாரத்துடன், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாது, மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தார். இவ்வுத்தியோகத்தர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றில் பங்குபற்றுவதற்கு வெளிநாடு செல்ல அனுமதிக்கப்பட்டு 2011 ஒக்டோபர் 03 முதல் II ஆந் தர நிறைவேற்றுதர முகாமையாளர் பதவிக்கும் 2011 ஒக்டோபர் 20 முதல் I ஆந் தர நிறைவேற்றுதல முகாமையாளர் பதவிக்குமான பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு முகாமையாளராகப் பணியாற்றி, 2 குற்றங்களுக்கக் குற்றவாளியாகக் காணப்பட்டு, வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஒருவர் சமர்ப்பித்த மேன் முறையீட்டைக் கவனத்திற் கொண்டு, மீண்டும் ஒழுக்காற்று நடவடிக்கையை மேற்கொள்வதற்கு இடமளித்தவாறு அவர் தங்காலை, குருநாகலை, மின்னேரியா, கண்டி, சிலாபம், நீர்கொழும்பு ஆகிய நிறைவேற்று தரத்திலான முகாமையாளராக நியமனஞ் செய்யப்பட்டிருந்தார்.

(ஈ) கூட்டுத்தாபனம் பயனடையத்தவறியிருக்கும் 09 ஏக்கர் 15.59 பேர்ச் உடைய 08 காணிகளைக் குறித்த நபர்களிடமிருந்த சுவீகரிப்பதற்கு 32 ஆண்டுகளாக சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கடற்றொழில் கூட்டுத்தாபனத் தலைவருடன் தொடர்பு கொண்ட 2013 மார்ச் 06 ஆந் திகதிய NPC/1/2/6 ஆம் இலக்க கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சின் கடிதத்தின் பிரகாரம், ரூபா 15 மில்லியன் பெறுமதியான திருகோணமலை மீன் விற்பனைக் கூடம் 2013 மார்ச் 09 முதல் கூட்டுத்தாபனத்தால் சுவீகரிக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டபோதும், கணக்காய்வுத் தீர்மானமானது 2016 சனவரி வரை சுவீகரிப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

(ஊ) இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விற்பனைக்கான மீன்களது பௌதீகக் கையிருப்பை புத்தகப் பெறுமதியுடன் ஒப்பிடுகையில் 5,939 கிலோகிராம் குறைவு அவதானிக்கப்பட்டது. அக்குறைவுக்குக் காரணமான விடயங்களைக் கண்டறிந்து குறித்த நபர்பகளிடமிருந்து அதனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(எ) 2009 ஆம் ஆண்டின்போது ஊவா பரணகம பிரதேசத்தில் வாகனங்களின் மூலம் மீன் விற்பனை செய்வதற்காக, கடன் அடிப்படையில் வெளி நபர்களுக்கு ரூபா 874,255 பெறுமதியான 2,117 கிலோகிராம் மீன்கள் விநியோகிக்கப்பட்டதுடன், அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையில் ரூபா 427,276 ஐக் கூட்டுத்தாபனம் ஏற்றுக்கொள்வதற்கும் எஞ்சிய நிலுவைத் தொகையான ரூபா 446,979 ஐ

ஓராண்டிற்குள் குறித்த வெளி நபர்களிடமிருந்து அறவிடுவதற்கும் 2012 நவெம்பர் 12 ஆந் திகதிய பெற்ற 980 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் தீர்மானம் செய்யப்பட்டிருந்தது. பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானம் 04 ஆண்டுகளின் பின்னரும் ரூபா 200,000 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

(ஏ) 2016 மே 19 ஆந் திகதி நடைபெற்ற 1015 ஆம் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தின்படி 2016 ஜூலை 30 ஆந் திகதி முதல் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் குளிர்ச்சாலைத் தொகுதி மூடப்பட்டபோதும், குளிர்ச்சாலைத் தொகுதியினுள்ளே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மீன்களது கையிருப்பை அப்புறப்படுத்துவது தொடர்பான ஆலோசனை குறித்த நபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 2009 ஆம் ஆண்டு முதல் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 5,140 கிலோகிறாம் மீன் மற்றும் வெட்டி அகற்றப்பட்ட மீன்களது பாகம் 12 நாட்களாக மூடப்பட்டிருந்த குளிர்ச்சாலைத் தொகுதிக்குள்ளே இருந்ததாலும் அவை பழுதடைந்தமையாலும் ஏற்பட்ட துர்நாற்றம் காரணமாக பிரதேசவாசிகள் இடைஞ்சலுக்குள்ளானதுடன் ஊடகங்களால் குறித்த நிகழ்வு தொடர்பாக பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு, அதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் நன்மதிப்பிற்கு பாதக விளைவை ஏற்படுத்தியிருந்தது.

(ஐ) வெளி நிறுவனங்கள் மற்றும் நபர்களால் வழங்கப்படும் மீன்கையிருப்பு தொடர்பாகக் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் குளிர்ச்சாலையின் மூலம் அதி கூடிய குளிரூட்டல் வசதிகளை வழங்கும்போது கட்டணங்களை அறவிடுவது சம்பந்தமான முறையான விதி முறைகளை முகாமைத்துவம் அறிமுகஞ் செய்யாமையால், 2016 ஆகஸ்ட் 19 ஆந் திகதியில் உள்ளவாறு குளிர்ச்சாலை வசதிகளை வழங்கிய நபர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை மீதியில் 02 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை மீதியாகிய ரூபா 4,014,847 உள்ளடங்கியிருந்தது.

(ஒ) மிகக் குறைந்த காலத்தின்போது உருவாகும் மழையின்போதும் பிரதான பாதையிலிருந்து கூட்டுத்தாபனக் காணிக்குள்ளே விரைந்து வரும் அசுத்த நீரை வழிந்தோடச் செய்வதற்குப் பொருத்தமான ஏற்பாடுகளைக் கூட்டுத்தாபனம் செய்வதற்குத் தவறியிருந்தது. இதன் காரணமாக, கூட்டுத்தாபனப் பதவியணியினர் தமது கடமைகளைத் தடையின்றி நிறைவேற்ற முடியாதிருப்பது அவ்விடத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் மூலம் தெரிய வந்தது. இதனூடாகக் கூட்டுத்தாபன ஊழியர்கள் பல்வேறு நோய்களுக்கு ஆளாவதற்கான சந்தர்ப்பங்களைத் தடுப்பதற்கு இயலாத நிலை உள்ளது. அவ்வாறே, கூட்டுத்தாபனக் காணியில் அப்புறப்படுத்தப்பட வேண்டிய பொருட்கள் குவித்து வைக்கப்பட்டிருத்தல் மற்றும் மழை நீர் சேர்வதன் காரணமாக டெங்கு நுளம்புகள் உருவாகுவதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தன.

**4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்**
----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியளவில் 250 மீன் விற்பனைக் கூடங்களை நிர்மாணிப்பதற்கு இலக்கிட்டு, அத் தேவையை நிறைவு செய்வதற்கென 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அரச வங்கி ஒன்றிலிருந்து பெறப்பட்ட ரூபா 100 மில்லியன் கடனுக்கு வருடாந்தம் ரூபா 38.5 மில்லியன் வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், 2010 முதல் 2014 வரையான காலத்தின்போது ரூபா 47.2 மில்லியன் செலவு செய்து 91 விற்பனைக் கூடங்கள் மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தன. சாத்தியவள ஆய்வு எதுவும் மேற்கொள்ளப்படாததாலும் நெடுஞ்சாலை விரிவுபடுத்தப்பட்டமையாலும் விற்பனைக் கூடங்களை அகற்ற வேண்டியேற்பட்டதால் 49 விற்பனைக் கூடங்கள் மூடப்பட்டிருந்தன. அவ்வாறே, காணியைச் சுவீகரிக்காது நிர்மாண வேலைகள் நடைபெற்றமையால் சட்டபூர்வச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு அதிக கிரயம் செலவாகிய சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீன்பிடி வேலைகள் நடைபெறும் 32 நிறைவேற்றுதர இடங்களில் 30 நட்டத்தில் இயங்கின. மீளாய்வாண்டின்போது ஏற்பட்டிருந்த மொத்த நட்டம் ரூபா 138,040,828 ஆகும். 08 ஐஸ் இயந்திரசாலைகளும் மீளாய்வாண்டின்போது ரூபா 33,364,965 மொத்த நட்டத்திற்குள்ளாகின.

**4.4 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான ரூபா 12,211,084 பெறுமதியான 21 வாகனங்கள் 06 மாதங்கள் தொடக்கம் 07 ஆண்டுகள் வரை பயன்படுத்தப்படாதிருந்தன.

**4.5 இனங்காணப்பட்ட இழப்புகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது கூட்டுத்தாபனம் மேலதிகப்பற்று வட்டியாகக் கொடுப்பனவு செய்த தொகை ரூபா 7,597,811 ஆகும்.

(ஆ) பணிக்கொடைக் கொடுப்பனவு தாமதமாகியமையால் மீளாய்வாண்டின்போது ரூபா 1,665,963 வட்டியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 745 எனினும், உள்ளவாறான பதவியணி 1,228 ஆக இருந்தமையால் ஊழியர் எண்ணிக்கையில் 483 அதிகரிப்பு நிலவியது. தேவையைக் குறிப்பாக இனங்காணாது மேலதிக ஊழியர்களை ஆட்சேர்த்ததால் கூட்டுத்தாபனத்தின் ஊழியர் கிரயம் உயர்வடைந்து, அதன் காரணமாக கூட்டுத்தாபனம் நட்டம் அடையும் நிலைக்குள்ளாகியது.

**5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், 2016 ஜுலை 04 ஆந் திகதியன்றே மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**5.2 கூட்டிணைந்த திட்டம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் தயாரித்த கூட்டிணைந்த திட்டத்தில் ''ஸ்வ சம்பத் கலாபய'' மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச விதிகளுக்கமைவாகவும் அதற்குப் புறம்பாகவும் மீன் பிடித்தலில் ஈடுபடுதலும் வெளிநாட்டுச் சந்தைகளில் மீன்களை விற்பனை செய்வதும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உற்பத்தி மற்றும் விநியோகித்தர்களை பிரதிநிதித்துவப்படுத்தலும் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான உபாயத்திற்கான திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் 2014 - 206 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்தின் இலக்கானது இறுதி நுகர்வோரைச் சந்தையாகக் கருதி. இனங்காண்பதன் மூலம் விற்பனைத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், நிறுவன ரீதியான நுகர்வோராக இலக்கிடப்பட்ட சந்தையாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தில் ஒவ்வொரு நோக்கத்தையும் நிறைவேற்றுவதற்கான இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம்செயல்நடவடிக்கைத் திட்டம் உயர் குணநலன்களுடன் கூடிய பாவனையாளர் சேவையைப் பேணுதல், வளங்களைப் பயன்படுத்தலும் முகாமைத்துவ வினைத்திறனை உயர்வடையச் செய்தலும் மீன்களது விலையை நிலைப்படுத்தும் பிரதிநிதியாக நடவடிக்கைகளை மேற்கொள்வதும் போன்ற நோக்கங்களை ஈடேற்றுவதற்கான செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருக்கவில்லை.

## 5.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட இழப்புகளை அறவிடுவதற்கும் மேற்கொள்ளப்படும் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.5 பெறுகை மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

கூட்டுத்தாபனத்தின் விற்பனைத் தேவைகள் தொடர்பாகத் தேவைப்படும் கருவாட்டைக் கொள்வனவு செய்வதற்கு 09 பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. அதில், ஆகக் குறைந்த கூறு விலையைச் சமர்ப்பித்திருந்த வழங்குனரது கூறுவிலை மாற்றஞ் செய்யப்பட்டு, அதிகூடிய கூறுவிலையைச் சமர்ப்பித்திருந்த வழங்குவதற்குச் சகல ஒப்பந்தங்களும் வழங்கப்பட்டதன் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 315,000 இழப்பு ஏற்பட்டிருந்தது.

## 5.6 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பாராளுமன்ற பொது முயற்சிகள் மீதான கணக்குக் குழு பணிக்கப்பட்ட பின்வரும் பணிப்புரைகள் நிறைவேற்றப்படவில்லை.

(அ) 2006 ஆம் ஆண்டின்போது தனியார் கம்பனி ஒன்றுடன் ஏற்படுத்திக் கொண்ட கூட்டு வர்த்தக நடவடிக்கைகள் 2010 ஆம் ஆண்டளவில் செயலிழந்தமையால் அதில் முதலீடு செய்யப்பட்டுள்ள காணியின் உரித்தை மீண்டும் பெற்றுக்கொள்ளுதல்.

(ஆ) நிலுவையாக உள்ள கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) வருமானக் கட்டுப்பாடு | - நிறைவேற்றாளரால் மேற்கொள்ளப்படும் மீன் விற்பனை தொடர்பான வருமானத்தை அறவிடுதல் நலிவுற்ற நிலையில் இருந்தமை மற்றும் பல ஆண்டுகளாக நிலுவையாக இருந்த வருமானத்தை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்தமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | - அங்கீகரிக்கப்பட்ட பாதீடு செய்யப்பட்ட கணக்குகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை. |
| (இ) கையிருப்புக் கட்டுப்பாடு | - அதிஉயர் கையிருப்பு மட்டம் தீர்மானிக்கப்படாமையும் கையிருப்பை வழங்கும் விதிமுறைகளும் அறிமுகஞ் செய்யப்படாமை மற்றும் பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற கையிருப்பு நிலவுதலும். |
| | - பின்னர் பணத்தைச் செலுத்தும் அடிப்படையில் குளிர்ச்சாலையில் இருந்து கையிருப்பை வழங்கியமை. |
| | - தரம் குறைந்த கையிருப்பைக் களஞ்சியப்படுத்தல். |
| | - நீண்டநாட்களாகக் களஞ்சியசாலையில் இருந்து அப்புறப்படுத்தப்படாத மற்றும் முறையாக குளிர்ச்சாலைக் கட்டணத்தைச் செலுத்தாத வெளிநபர்களுக்கு மீண்டும் குளிர்ச்சாலை வசதிகளை வழங்குதல். |
| | - மீன்களுடன் பிற பொருட்கையிருப்பையும் களஞ்சியப்படுத்தல். |
| | - கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மீன்களை சந்தைப்படுத்தலில் முறையான விதிமுறை இல்லாமை |
| | - பயன்பாட்டிற்கு பொருத்தமற்ற மீன்களை நல்லநிலையில் உள்ள மீன்களுடன் களஞ்சியப்படுத்தல். |